சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.99/2018</u>

02.02.2026

வா.சா.2 திரு.ராதாகிருஷ்ணன், த/ பெ. கோதண்டபாணி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் நீலக்குடி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்களை அய்யாக்கண்ணு சாகுபடி செய்தார் என்றால் சரியல்ல. நான்தான் சாகுபடி செய்தேன். அய்யாக்கணணு விவசாய வேலைக்கு வருவார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. நான் எனது மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும் போதே தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் 24.04.1986 ல் பிரதிவாதி சொத்தை அனுபவம் செய்வதற்கு உறுதிமொழி ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1986 முதல் தாவா சொத்துக்களை பிரதிவாதி அனுபவம் செய்து சாகுபடி செய்துவருகிறார் என்றாலும் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது அனுபவத்தில் இல்லாத தாவா சொத்தை எனது மகள் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைத்து தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னால் தற்போது எதையும் படிக்க இயலாது எனக்கு மாலைக்கண் நோய் உள்ளது. பகலிலும் படிக்கும் அளவிற்கு படிக்க முடியாது வெளிச்சம் மட்டுமே தெரிந்தது. தாவா சொத்தை பொறுத்து அய்யாக்கண்ணுவிடம் ரூ.2,200/- ஐ பெற்றுக்கொண்டு 1986 ல் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றாலும் அதிலிருந்து எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் அய்யாக்கண்ணுவிற்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் இரண்டு நபர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றாலும் தற்போது நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எப்போதும் தாவா சொத்துள்ள கிராமத்திற்கு போகவேயில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை நான் எக்காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றாலும் தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா

இருப்பதை பயன்படுத்தி என் மகள் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை சாட்சியமளிக்க வாதி அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி எனது மகள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.